முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை - 2018

## 51 - நாடகமும் அரங்கியலும்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# 51 -நாடகமும் அரங்கியலும் I,II
## புதிய
## பாடத்திட்டம்

**புள்ளியிடும் திட்டம்**

நாடகமும் அரங்கியலும்ெ படநெறியானது,
வினாப்பத்திரம் -I , வினாப்பத்திரம் -II என இரு பத்திரங்களை உள்ளடக்கியது.

பகுதி- I இன் 40 வினாக்களையும் பகுதி- II இல் 07 வினாக்களையும் கொண்டுள்ளது.

பகுதி- I இன் 40 வினாக்களும் **கட்டாய வினாக்களாகும்.** சரியான விடையை இனம் கண்டு விடைத்தாளில் அதற்குரிய கூட்டில் புள்ளடி இடுதலாகும்.

வினாப்பத்திரம் -I
பகுதி- I இன் 40 வினாக்களுக்கு. 40x1=40புள்ளிகள்
பகுதி- II இல் 07 வினாக்களையுடையது.

இவ்வினாத்தளில் 07 வினாக்களில் முதலாம் வினா கட்டாயமானது.
ஏனையவற்றுள் நான்கு வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை அளித்தல் வேண்டும் .

05 x 12 = 60 புள்ளிகள்

வினாப்பத்திரம் -I ,II
பகுதி- I இன் 40 புள்ளிகள்
பகுதி- II இன் 60 புள்ளிகள்
**மொத்தம் 100 புள்ளிகள்**


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2018

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ............................................................ ✓ $\frac{4}{5}$
............................................................
............................................................

(ii) ............................................................ ✓ $\frac{3}{5}$
............................................................
............................................................

(iii) ............................................................ ✓ $\frac{3}{5}$
............................................................
............................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும். அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும். துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும். **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.** பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II" எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

21 - சிங்களமொழியும் இலக்கியமும், 22 - தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான புள்ளிகளை தனி தனியான புள்ளித்தாளில் பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II, III" எனும் நிரல்களில் உரிய நிரலில் பதிதல் வேண்டும்.

**முக்கியக் குறிப்பு :**

**சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் வினாப்பத்திரம் I, II, மற்றும் III என்ற நிரலில் உரிய வகையில் பதிதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.**

ooo



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**51 T I,II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2018 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2018 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2018**

| | | |
|---|---|---|
| නාට්‍ය හා රංග කලාව | I, II | 11. 12. 2018 / 1300 - 1610 |
| **நாடகமும் அரங்கியலும்** | I, II | |
| Drama and Theatre | I, II | |

| | | | |
|---|---|---|---|
| පැය තුනයි | අමතර කියවීම් කාලය | - | මිනිත්තු 10 යි |
| **மூன்று மணித்தியாலம்** | **மேலதிக வாசிப்பு நேரம்** | - | **10 நிமிடங்கள்** |
| *Three hours* | Additional Reading Time | - | 10 minutes |

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## நாடகமும் அரங்கியலும் I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** உணர்ச்சி வழிச் சித்திரிப்பு என்பது,
  (1) உடல் உறுப்புக்களால் சித்திரிக்கப்படுவது ஆகும்.
  (2) குரலால் சித்திரிக்கப்படுவது ஆகும்.
  (3) முகபாவங்களால் வெளிப்படுத்தப்படுவது ஆகும்.
  (4) வேட உடை, ஒப்பனை மற்றும் அரங்கப் பொருட்களால் சித்திரிக்கப்படுவது ஆகும்.

**2.** ஒபேறா என்பது,
  (1) வாய் மொழியைப் பயன்படுத்தாது நடிகர் ஒருவர் நடிபாகத்தைச் சித்திரிப்பதாகும்.
  (2) குறிக்கப்பட்ட செயலை ஆடல் வழியாகச் சித்திரித்துக் காட்டுவதாகும்.
  (3) முன்னாயத்தமின்றி தரப்பட்ட செயலைப் பேசி நடித்துக் காட்டுவதாகும்.
  (4) தாளம், சந்தம் என்பவற்றிற்கேற்றவாறு பாடி நடித்துக் காட்டுவதாகும்.

**3.** வில்லுப்பாட்டும் கதாப்பிரசங்கமும்,
  (1) கட்புலக் கலைகளாகும்.
  (2) செவிப்புலக் கலைகளாகும்.
  (3) பேச்சுக் கலைகளாகும்.
  (4) கட்புல-செவிப்புலக் கலைகளாகும்.

**4.** 'புதியதொரு வீடு' நாடகம்,
  (1) சிறுவர் நாடகங்களில் ஒன்றாகும்.
  (2) பா நாடகங்களில் ஒன்றாகும்.
  (3) பாடசாலை நாடகங்களில் ஒன்றாகும்.
  (4) கூத்துருவ நாடகங்களில் ஒன்றாகும்.

**5.** 'புதியதொரு வீடு' நாடகத்தில் இடம்பெறும் பாத்திரங்களை மாத்திரம் கொண்ட தொகுதி எது?
  (1) மாயன், மாசிலன், மன்னவன், மறைக்காடர்
  (2) மறைக்காடர், மையுண்ட நெடுங்கண்ணாத்தை, ருத்திரமூர்த்தி
  (3) மயிலி, மையுண்ட நெடுங்கண்ணாத்தை, மாசிலாமணி
  (4) மீனவர், பாடகர், உரைஞர், மீன் வியாபாரிகள்

**6.** பின்வருவனவற்றுள் மலையகக்கூத்து **அல்லாதது**
  (1) காமன் கூத்து
  (2) அர்ச்சுனன் தபசு
  (3) நாட்டைக்கூத்து
  (4) பொன்னர் சங்கர்



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

7. களத்துமேடு எனும் அரங்க வெளியில் ஆடப்படும் ஆற்றுகை வடிவம்
(1) கூத்து (2) கோலம (3) சொக்கரி (4) நாடகம

8. பாத்திரம் ஒன்றின் உளவியற் பண்பை எடுத்துக்காட்டுவது, அதன்
(1) பௌதீக இயல்பாகும். (2) நடத்தைக்கோலமாகும்.
(3) அந்தஸ்தாகும். (4) தொழில், சமயம் என்பனவாகும்.

9. 'புதியதொரு வீடு' நாடகத்தில் எந்தவகைப் பிரச்சினைகள் பேசப்படுகின்றன?
(1) கல்விசார் பிரச்சினைகள் (2) கட்டிளமைப் பருவப் பிரச்சினைகள்
(3) சமூகம்சார் பிரச்சினைகள் (4) சமயம், ஒழுக்கம் பற்றிய பிரச்சினைகள்

10. நாடக எழுத்துருவொன்றை நாடகமாக மாற்றுபவர் எவ்வாறு அழைக்கப்படுவார்?
(1) முகாமையாளர் (2) தயாரிப்பாளர் (3) நெறியாளர் (4) பார்ப்போர்

11. பின்வருவனவற்றுள் குரற்பயிற்சி, சுவாசப்பயிற்சி என்பவற்றின் முக்கியத்துவம் **அல்லாதது** எது?
(1) குரலின் வீச்சையும் ஒலியையும் மாற்றியமைக்கலாம்.
(2) ஒலியைக் கட்டுப்படுத்தவும் வெளிப்படுத்தவும் முடியும்.
(3) உடலைத் தளர்வாக வைத்திருக்க முடியும்.
(4) ஒலியின் வீச்சைக் கட்டுப்படுத்த உதவும்.

12. 'என்னடி உன்தன் கோப்பியில் ஒரு சிறுதுளி...' எனும் பாடல்,
(1) கிராமியப் பாடலாகும். (2) சிறுவர் பாடலாகும்.
(3) நவீன நாடகப் பாடலாகும். (4) விடுகதைப் பாடலாகும்.

13. பின்வருவோருள் மரபுவழிக் கூத்தொன்றில் பாத்திரங்களை அறிமுகப்படுத்துபவர் **அல்லாதோர்**
(1) சபையோர் (2) கட்டியக்காரன் (3) பாத்திரங்கள் (4) உரைஞர்

14. நடிகர் தெரிவின்போது ஒரு பாத்திரத்தின் ஊடாக இன்னொரு பாத்திரத்தைத் தெரிவுசெய்யும் முறை
(1) திறந்த தெரிவு (2) மூடிய தெரிவு (3) மறைமுகத் தெரிவு (4) சல்லடைத் தெரிவு

15. பின்வருவனவற்றுள் கதவு அடித்துப் பாடுதல், ஏசற் பாடல்கள் ஆகியன இடம்பெறும் சடங்கு
(1) குளுர்த்தி (2) வேட்டைத்திருவிழா (3) மாம்பழத்திருவிழா (4) சூரன் போர்

16. 'ரட்டயக்கும' சடங்கின் பிரதான நோக்கம்
(1) சமூகத்தில் காணப்படும் குறைபாடுகளை எள்ளி நகையாடுதல்
(2) பார்ப்போரைக் களிப்பூட்டுதல்
(3) குழந்தை வரம் வேண்டி நிகழ்த்தப்படுதல்
(4) பிசாசுகளை விரட்டுவதற்காக நடத்தப்படுதல்

17. பின்வருவனவற்றுள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் **நிகழ்த்தப்படாத** கூத்து
(1) வடமோடிக் கூத்து (2) வசந்தன் கூத்து (3) குடமுதற் கூத்து (4) பறைமேளக் கூத்து

18. பின்வருவனவற்றுள் யாழ்ப்பாண தென்மோடிக் கூத்துகளுக்குள் **அடங்காதது**
(1) எஸ்தாக்கியார் (2) தேவசகாயம்பிள்ளை
(3) கருங்குயில் குன்றத்துக் கொலை (4) பப்பிரவாகன்

19. நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்கள் பற்றிய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) பெண் பாத்திரங்களைச் சிறப்பாக சித்திரிக்க வல்லவர்.
(2) பபூன் பாத்திரச் சித்திரிப்பினால் அதிகம் கவரப்பட்டவர்.
(3) சரீர, சாரீர, இசைஞானத்தால் நடிப்புத் திறனைப் பாடலே அரங்காகக் கொண்டவர்.
(4) ஈழத்து சங்கரதாஸ் எனப் புகழப்பட்டவர்.

20. 'ஈழத்து இசை நாடக வரலாறு' எனும் அரங்கியல் ஆய்வு நூலை எழுதியவர்
(1) செ. சுந்தரம்பிள்ளை (2) அராலியூர் சுந்தரம்பிள்ளை
(3) சங்கரதாஸ் சுவாமிகள் (4) த. கலாமணி

21. நெறியாளர் ஒருவரின் தகுதிகளும் தகைமைகளும் என இனங்காணப்பட **முடியாதவை** யாவை?
(1) விமர்சன நோக்கும் படைப்பாக்கச் சிந்தனையும்
(2) அழகியலுணர்வும் சமநிலை ஆளுமையும்
(3) தலைமைத்துவப் பண்பும் முகாமைத்துவ அறிவும்
(4) சர்வாதிகாரப் போக்கும் தனித்து இயங்கும் பண்பும்


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**22.** மனோரதிய நாடகங்களில் காட்சி விதானிப்பு பெரும்பாலும்
(1) உள்ளது உள்ளபடியே காட்டப்படும். (2) ஆடம்பரமானதாகக் காட்டப்படும்.
(3) குறியீட்டுத் தன்மையில் காட்டப்படும். (4) சாதாரண வாழ்வு நிலையில் காட்டப்படும்.

**23.** 'புதியதொரு வீடு' நாடகத்தில் வரும் பாத்திரங்களின் வேட உடை,
(1) யதார்த்தம் சார்ந்ததாக இருக்கும்.
(2) குறியீட்டுத் தன்மையானதாக இருக்கும்.
(3) யதார்த்தமானதாகவும் குறியீட்டுத்தன்மையானதாகவும் இருக்கும்.
(4) பகட்டு ஆடம்பரமானதாக இருக்கும்.

**24.** நாடகம் ஒன்று நிகழ்த்தப்படும்போது அதன் ஒளி அமைப்பைக் கட்டுப்படுத்தக்கூடிய நான்கு காரணிகளாவன
(1) செறிவு, பிரகாசம், வர்ணம், திசை (2) பிரகாசம், திசை, வர்ணம், அசைவு
(3) செறிவு, விநியோகம், திசை, அசைவு (4) பிரகாசம், திசை, செறிவு, வர்ணம்

**25.** மேடையின் குறுகிய பகுதியில் அடர்த்தியான ஒளிக்கற்றைகள் மூலம் வெளிச்சத்தை வழங்கக்கூடிய ஒளி விளக்கு
(1) பெருக்கொளி (2) பொட்டொளி (3) பரவல் ஒளி (4) பரப்பொளி

**26.** ஊமச் சித்திரிப்பில் ஈடுபடும் நடிகர் ஒருவர் வெளிப்படுத்தும் சித்திரிப்பு முறைகள் எனக் கருதப்படுவன
(1) உடல் வழி, குரல் வழி, காண்பிய வழிச் சித்திரிப்புக்களாகும்.
(2) குரல் வழி, காண்பிய வழி, உணர்ச்சி வழிச் சித்திரிப்புக்களாகும்.
(3) காண்பிய வழி, உணர்ச்சி வழி, உடல் வழிச் சித்திரிப்புக்களாகும்.
(4) உணர்ச்சி வழி, உடல் வழி, குரல் வழிச் சித்திரிப்புக்களாகும்.

**27.** 'புதியதொரு வீடு' நாடகத்தில் மாசிலன் வைத்திருக்கும் வலை, மன்னவனின் வானொலிப்பெட்டி, மையுண்ட நெடுங்கண்ணாத்தையின் மீன் கூடை என்பன குறிப்பாக,
(1) மேடைப் பொருட்கள் எனப்படும். (2) கைப்பொருட்கள் எனப்படும்.
(3) காட்சிப் பின்னணிப் பொருட்கள் எனப்படும். (4) காட்சி அமைப்புப் பொருட்கள் எனப்படும்.

**28.** காமன் கூத்தில் பயன்படுத்தப்படும் பிரதான வாத்தியம்
(1) மத்தளம் (2) மிருதங்கம் (3) தப்பு (4) பறை

**29.** பின்வரும் பண்புகளைக் கருதுக.
- மனிதரும் பொம்மைகளும் நடித்தல்
- ஆற்றுகை வெளி விசாலித்து இருத்தல்
- ஊர்வல அரங்காகக் காணப்படுதல்
- கடுமையான நோன்பிருந்து இறுதிநாளில் நிகழ்த்துதல்
- வார்த்தைகளைவிட பெருங்காட்சிப் பண்பிற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தல்

இப்பண்புகளுக்குரிய சடங்கு எது?
(1) அர்ச்சுனன் தபசு (2) பாண்டவர் வனவாசம்
(3) மாம்பழத்திருவிழா (4) சூரன் போர்

**30.** பின்வருவனவற்றுள் கூத்தின் பண்பு **அல்லாதது**
(1) எடுத்துரைக்கும் பண்புடனான அளிக்கை (2) மோடிமைப் பண்பிற்குரிய நடிப்பு
(3) நீண்ட பெருங்காட்சி மேடை (4) ஆடல், பாடலினூடாகக் கதை சொல்லுதல்

**31.** சிந்து நடைக் கூத்தினைப் புதிய வடிவில் இணைத்து மேற்கொள்ளப்பட்ட கூத்துருவ முயற்சிக்கு உதாரணமாகக் கொள்ளத்தக்கது
(1) கந்தன் கருணை (2) பாஞ்சாலி சபதம் (3) பொய்க்கால் (4) சங்காரம்

**32.** கலையரசு சொர்ணலிங்கம் உருவாக்கிய நாடக மரபு எது?
(1) இயற்பண்பு சார்ந்த ஆங்கில நாடக மரபின் தாக்கத்தால் உருவாகிய சொல்லாடல் நாடகமரபு
(2) நடப்பியல் பிரச்சினைகளைப் பேச்சு வழக்கில் முன்வைக்கும் நாடக மரபு
(3) எடுத்துரைக்கும் பண்பிலான சமூகப் பிரச்சினைகளை முன்வைக்கும் நாடக மரபு
(4) கூத்து மரபினை நவீன நாடக மரபினது இன்றியமையாமையாக உருவாக்கிய நாடக மரபு

**33.** பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட அரசியல் நாடகம்
(1) பொருளோ பொருள் (2) துரோகிகள்
(3) உடையார் மிடுக்கு (4) நாட்டவன் நகர வாழ்க்கை


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**34.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - சிறுவர் நாடகங்களை பிரக்ஞை பூர்வமாகத் தமிழில் அறிமுகம் செய்தவர்.

B - கூத்து மொழியை அரங்கியலாக்கியவர்.

C - மொழிபெயர்ப்பு நாடகங்கள் ஊடாகத் தமிழ் அரங்கை சர்வதேச நிலையில் பார்ப்பதற்குத் தூண்டியவர்.

இங்கு A, B, C ஆகிய கூற்றுகளின் மூலம் குறிக்கப்படுபவர்கள் முறையே,

(1) தாசீசியஸ், நா. சுந்தரலிங்கம், க. சிதம்பரநாதன்
(2) ம. சண்முகலிங்கம், சி. மௌனகுரு, க. பாலேந்திரா
(3) சி. மௌனகுரு, க. பாலேந்திரா, சுகைர் ஹமீட்
(4) நா. சுந்தரலிங்கம், ம. சண்முகலிங்கம், இ. முருகையன்

**35.** 'நாடகம்' ஆடப்படும் 'கரலிய' அரங்கைப் பொறுத்தவரை பார்ப்போர்

(1) ஒரு பக்கமிருப்பர். (2) இருபக்கமும் இருப்பர்.
(3) மூன்று பக்கமுமிருப்பர். (4) சுற்றிவர இருப்பர்.

**36.** பின்வருவனவற்றுள் வடமோடிப் பாங்கில் அமைந்தது

(1) காத்தவராயன் நாடகம் (2) இராம நாடகம்
(3) அலங்காரரூபன் நாடகம் (4) கோவலன் கூத்து

**37.** பின்வருவனவற்றுள் வெள்ளை நிற வேட உடைக்குரிய பாத்திரம் **அல்லாதது** எது?

(1) தாதி (2) வைத்தியர்
(3) குடும்ப நலமாது (4) பொதுச் சுகாதாரப் பரிசோதகர்

**38.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A : அண்ணன் தான் இல்லை, அடுத்தவர்கள் யாவரும் வந்து விட்டார்கள்.

B : வடிவாய்ச் சவமாக! என்ன செய்வோம் நாங்கள் எழும்பன் இருந்தென்ன?

இங்கு A, B ஆகியவற்றினால் குறிப்பிடப்படும் பாத்திரங்கள் முறையே

(1) மாசிலன், கண்ணாத்தை (2) மாசிலன், மன்னவன்
(3) மாசிலன், மயிலி (4) மாசிலன், மறைக்காடர்


**39.** படத்தில் காட்டப்பட்டுள்ள பாத்திரங்களினால் வெளிப்படுத்தப்படும் உணர்வுகள் முறையே,

(1) அன்பும் சோகமுமாகும்.
(2) கோபமும் சோகமுமாகும்.
(3) சிரிப்பும் கோபமுமாகும்.
(4) பயமும் அன்புமாகும்.



**40.** படத்திற் காட்டப்பட்டுள்ள ஒளிவிளக்கு எது?

(1) பொட்டொளி (Spot light)
(2) பெருக்கொளி (Flood light)
(3) மங்கலாக்கி (Dimmer)
(4) வர்ணச்சக்கரம் (Colour wheel)



* *



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2018
க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2018

| විෂයය අංකය<br>பாட இலக்கம் | 51 | විෂයය<br>பாடம் | 51 – நாடகமும் அரங்கியலும் |
|---|---|---|---|

## I පත්‍රය - පිළිතුරු
## I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 3 | 21. | 4 | 31. | 1 |
| 02. | 4 | 12. | 3 | 22. | 2 | 32. | 1 |
| 03. | 4 | 13. | 4 | 23. | 3 | 33. | 2 |
| 04. | 2 | 14. | 4 | 24. | 1 | 34. | 2 |
| 05. | 1 | 15. | 2 | 25. | 2 | 35. | 3 |
| 06. | 3 | 16. | 3 | 26. | 3 | 36. | 2 |
| 07. | 3 | 17. | 3 | 27. | 2 | 37. | 4 |
| 08. | 2 | 18. | 4 | 28. | 3 | 38. | 1 |
| 09. | 3 | 19. | 3 | 29. | 4 | 39. | 2 |
| 10. | 3 | 20. | 1 | 30. | 3 | 40. | 2 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

| | | | |
|---|---|---|---|
| නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව<br>சரியான விடைகளின் தொகை | 40<br>40 | I පත්‍රයේ මුළු ලකුණු<br>பத்திரம் I இன் மொத்தப்புள்ளி | 40<br>40 |


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**51 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2018 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2018 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2018**

නාට්‍ය හා රංග කලාව I, II
**நாடகமும் அரங்கியலும் I, II**
Drama and Theatre I, II

## நாடகமும் அரங்கியலும் II

**கவனிக்க :**
* **முதலாம்** வினாவுக்கும் ஏனையவற்றுள் எவையேனும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) கட்புலக் கலைகள் **இரண்டைப்** பெயரிடுக. (01 புள்ளி)

(ii) இலங்கையில் 'பொன்னர் சங்கர்' பெரும்பாலும் ஆடப்படும் பிரதேசம் எது? (01 புள்ளி)

(iii) நாடகமொன்றிற்காக நடிகரைத் தெரிவுசெய்யும் முறைகள் **இரண்டு** தருக. (01 புள்ளி)

(iv) குளுர்த்திச் சடங்கு நிகழ்த்தப்படுவதன் நோக்கம் யாது? (01 புள்ளி)

(v) அலங்காரரூபன் நாடகம் எந்த மோடி வகையைச் சார்ந்த நாடகமாகும்? (01 புள்ளி)

(vi) நடிகமணி வீ.வீ. வைரமுத்து உருவாக்கிய நாடக சபையின் பெயர் என்ன? (01 புள்ளி)

(vii) நாடகப் பாத்திரம் ஒன்றின் சமூகவியல் பண்புகள் **இரண்டினைத்** தருக. (01 புள்ளி)

(viii) குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களால் எழுதப்பெற்ற யதார்த்த நாடகம் ஒன்றைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

(ix) தப்பி வந்த தாடி ஆடு, தேவலோக யானை ஆகிய நாடகங்களை எழுதியோர் யாவர்? (02 புள்ளிகள்)

(x) வானொலி நாடகத்திற்கும் மேடை நாடகத்திற்கும் இடையே காணப்படும் பிரதான வேறுபாடுகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**2.** (i) ஆற்றுகைக் கலைகளின் பிரதான பண்புகள் **ஆறைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) நாடகக் கலையிலிருந்து பின்வருவன எவ்வாறு வேறுபடுகின்றன என்பதனை தனித்தனியே சுருக்கமாக விளக்குக.

(அ) இசை

(ஆ) நடனம்

(இ) தொலைக்காட்சி நாடகம்

(ஈ) சினிமா (08 புள்ளிகள்)

**3.** (i) நாடகம் நடிப்பதற்காக நடிகர் ஒருவர் பெற்றிருக்க வேண்டிய பயிற்சிகள் யாவை? (03 புள்ளிகள்)

(ii) நடிகர், மேலே (i) இல் நீர் குறிப்பிட்ட பயிற்சிகளைப் பெறவேண்டியதற்கான காரணங்களையும் அப்பயிற்சிகள் நாடகத்திற்கு உதவும் விதத்தையும் சுருக்கமாக விளக்குக. (09 புள்ளிகள்)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**4.** 'கூத்துக்கள் தமிழரின் மரபு வழியான நாடக வடிவங்கள் ஆகும்.'

(i) பின்வரும் கூத்துக்கள் பயிலப்படும் பிரதேசங்களைக் குறிப்பிடுக.

(அ) காமன் கூத்து

(ஆ) காத்தவராயன் கூத்து

(இ) வசந்தன் கூத்து

(ஈ) தென்பாங்கு (04 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கூத்துக்களில் எவையேனும் **இரண்டின்** ஆற்றுகை மரபுகளை விளக்குக. (08 புள்ளிகள்)

**5.** (i) ஈழத் தமிழரிடையே காணப்படும் சடங்காட்டங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு சடங்காட்டமும் நடத்தப்படும் பின்னணியைத் தருக. (03 புள்ளிகள்)

(iii) அச்சடங்காட்டங்கள் ஒவ்வொன்றினதும் முக்கிய பண்புகள் **இரண்டு** வீதம் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

**6.** (i) பின்வரும் அட்டவணையை உமது விடைத்தாளில் பிரதி செய்து, **ஆரோடு நோகேன்** நாடகம் தொடர்பாகக் கேட்கப்பட்டுள்ள விடயங்களைப் பூர்த்தி செய்க.

| | | |
|---|---|---|
| அ. | நாடகாசிரியர் (எழுதியவர்) | |
| ஆ. | எழுத்துருவகை | |
| இ. | ஆற்றுகை நேரம் | |
| ஈ. | பாத்திரங்களின் எண்ணிக்கை | |
| உ. | நடிகர்களின் எண்ணிக்கை | |
| ஊ. | ஆற்றுகை வெளி | |
| எ. | தேவையான மனித வளம் | |
| ஏ. | தேவையையான நிதி வளம் | |
| ஐ. | இலக்குப் பார்ப்போர் | |
| ஒ. | தேவையான இசைவாத்தியம் | |
| ஓ. | தேவையான ஒத்திகைக்காலம் | |
| ஔ. | நாடகத்தில் பயன்படும் ஒளிவகைகள் | |

(06 புள்ளிகள்)

(ii) **ஆரோடு நோகேன்** நாடகத்தில் வரும் பாத்திரங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவற்றில் ஏதேனும் **இரண்டு** பாத்திரங்கள் பற்றிச் சுருக்கமாக விபரிக்குக. (06 புள்ளிகள்)

**7.** (i) நாடகத் தயாரிப்பு என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) நாடகத் தயாரிப்பாளரின் பணிகள் **நான்கு** தருக. (04 புள்ளிகள்)

(iii) நாடகத் தயாரிப்பாளர் தனது பணிகளைத் திறம்படச் செய்வதற்காக அவரிடம் காணப்பட வேண்டிய தகைமைகள் **மூன்றினைச்** சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

***


Download all Past Papers - https://bookbeekid.com/resource/past-papers/

# நாடகமும் அரங்கியலும் II

1. சுருக்கமான விடை தருக.

i. கட்புல கலைகள்இரண்டைப் பெயரிடுக?
   - சிற்பம், ஓவியம், கட்டடம்

(01 புள்ளி)

ii. இலங்கையில் "பொன்னர் சங்கர்" பெரும்பாலும் ஆடப்படும் பிரதேசம் எது ?
   - மலையகம் (01 புள்ளி)

iii. நாடகமொன்றிற்காக நடிகரைத் தெரிவு செய்யும் முறைகள் இரண்டு தருக.
   - நியம முறை : திறந்த தெரிவு, மூடிய தெரிவு, சல்லடைத் தெரிவு.
   - நியமில் முறை : ஊமம் புதித்தளித்தல்.
   (இவற்றுள் ஏதாவது இரண்டு பற்றி குறிப்பிட்டால் புள்ளி வழங்குக)

(01 புள்ளி)

iv. குளுர்த்திச் சடங்கு நிகழ்த்தப்படுவதன் நோக்கம் யாது?
   - மழைவேண்டுதல் , நோய்தீர்த்தல், பயம் போக்குதல் , வளம் பெருகுதல், நம்பிக்கையூட்டல் .

(01 புள்ளி)

v. அலங்காரரூபன் நாடகம் எந்த மோடி வகையைச் சார்ந்த நாடகமாகும்.
   - தென்மோடி (01 புள்ளி)

vi. நடிகமணி வி.வி. வைரமுத்து உருவாக்கிய நாடக சபையின் பெயர் என்ன?
   - வசந்தகான சபா 01 புள்ளி)

vii. நாடகப் பாத்திரம் ஒன்றின் சமூகவியல் பண்புகள் **இரண்டினைத்** தருக ?
   - கல்வி , தொழில், அந்தஸ்து, பரம்பரை, இனம், வர்க்கம், பால் நிலை பண்பாடு .........

(01 புள்ளி)

viii. குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களால் எழுதப்பெற்ற யதார்த்த நாடகம் ஒன்றைக் குறிப்பிடுக?
   - உறவுகள், எந்தையும் தாயும்

(01 புள்ளி)

ix. தப்பி வந்த தாடி ஆடு, தேவலோக யானை ஆகிய நாடகங்களை எழுதியோர் யாவர்?
   - சி. மௌனகுரு
   - வேலுசரவணன் (02 புள்ளிகள்)

X. வானொலி நாடகத்திற்கும் மேடை நாடகத்திற்கும் இடையே காணப்படும் பிரதான வேறுபாடுகள் **இரண்டு** தருக.
   - வானொலி நாடகம் ஒரு தொழில்நுட்பம் சார்ந்த கலை ஆகும்.
     மேடை நாடகத்தில் தொழிநுட்பம் ஒரு அம்சமாகும்.
   - வானொலி நாடகம் செவிப்புலக் கலை (குரல் , சத்தம், இசை)
     மேடை நாடகம் கட்புல செவிப்புலக் கலை.
   - வானொலி நாடகத்திற்கு வாசகரின் மனமே அரங்காகும்.
     மேடை நாடகம் வெவ்வேறு அரங்குகளில் ஆற்றப்பெறும்.

(வேறு பொருத்தமான விடைகளைப் பரிசீலித்துப் புள்ளி வழங்கலாம்)

(02 புள்ளிகள்)

**மொத்தம் 12 புள்ளிகள்**


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

2. i. ஆற்றுகைக் கலைகளின் பிரதான பண்புகள் ஆறைக் குறிப்பிடுக.

- நிகழ்த்திக் காட்டும் பண்புடையவை
- ஆற்றுவோர் - பார்ப்போர் நேரடித் தொடர்புடையவை.
- தாக்கமறுதாக்கமுடையவை.
- கணப்பிரசன்னமனவை.
- உயிரோட்டமானவை.
- கட்புல- செவிப்புலத்தால் நுகரக்கூடியவை.
- காலவெளிக் கலைகள்.
- அறிவூட்டலுக்கும் மகிழ்வூட்டலுக்குமானவை.
- இயங்கு கலைகள்.

6 அம்சங்களுக்கு - 04 புள்ளிகள்
4/5 அம்சங்களுக்கு - 03 புள்ளிகள்
2/3 அம்சங்களுக்கு - 02 புள்ளிகள்
1 அம்சத்திற்கு - 01 புள்ளி (04 புள்ளிகள்)

ii. நாடகக் கலையில் இருந்து பின்வருவன எவ்வாறு வேறுபடுகின்றன என்பதனைத் தனித்தனியே சுருக்கமாக விளக்குக.

அ. இசை

- குரலையும், வாத்தியத்தையும் கொண்டு நிகழ்த்தப் பெறுவது.
- செவிப்புலப் பெறுகையை முதன்மைப்படுத்திய போதும் கட்புல செவிப்புல கலையாகவும் உள்ளது.
- வாத்திய இசையாகவோ, மிடற்றிசையாகவோ வருவது.
- இசைப் படிமங்கள் வழியாக மனவெளியில் காட்சிப்படிமத்தைப் படைக்க வல்லது
- மொழி கடந்தது.

ஆ. நடனம்

- உடல், உணர்ச்சி, காண்பிய வழிச் சித்திரிப்பில் அமைந்தது.
- இசைக்கு அமைய உடலின் அசைவுகளால் காட்சியைப் படைக்கும் கலை .
- சாஸ்திரிய, சாஸ்திரிய மல்லா வடிவங்களில் அமைந்தது.
- தாளம், லயம், ஒத்திசைவு என்பவை முக்கியமானவை.

இ. தொலைக்காட்சி நாடகம்.

- தொழிநுட்பக் கலை.
- சின்னத்திரை வழியாக நுகரப்படுவது.
- கமராவை முதன்மைப்படுத்தியது.
- தொடர் நாடகமாகவும் அமையக் கூடியது.
- அதிகம் அண்மித்த காட்சிகளைக் (Colse Up Shots) கொண்டது.

ஈ. சினிமா.

- கமராவை முதன்மைப்படுத்தியது.
- அண்மித்த, தூரக்காட்சிகள் இடம்பெறுவது.
- செவ்விதாக்கம் மூலம் (Editing) மூலம் தொகுத்துத் தரப்படுவது.
- தொழிநுட்பக்கலை.
- ஆற்றுவோர் - பார்ப்போர் நேரடித் தொடர்பு இல்லை
- தாக்கம் மறுதாக்கம் உடனடியாகக் கிடையாது.
- அந்தஅந்தக் களத்திற்கே சென்று காட்சிகள் ஒளிப்பதிவு செய்யப்படுவது.

(04 x 02 = 08 புள்ளிகள்)

**மொத்தம் 12 புள்ளிகள்**


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

3. i. நாடகம் நடிப்பதற்காக நடிகர் ஒருவர் பெற்றிருக்க வேண்டிய பயிற்சிகள் யாவை?
- உடற்பயிற்சி
- குரற் பயிற்சி
- உளப்பயிற்சி

இவை போன்ற பொருத்தமான விடை எழுதியிருப்பின் அவதானித்துப் புள்ளி வழங்குக .

(03 புள்ளிகள்)

ii. நடிகர், மேலே (i) இல் குறிப்பிட்ட பயிற்சிகளைப் பெறவேண்டியதற்கான காரணங்களையும் அப்பயிற்சிகள் நாடகத்திற்கு உதவும் விதத்தையும் சுருக்கமாக விளக்குக.

**உடற் பயிற்சி**
- நடிகர் உடற் பயிற்சி பெறுவதன் மூலம்அவர்கள் எத்தகைய சித்திரிப்பையும் மேற்கொள்ள முடியும்.
- நடிகரது உடலைப் பல்வேறு நிலைகளில் பயிற்சியில் ஈடுப்படுத்தும் போது , பல்வேறு பாத்திரங்களைப் சித்திரிக்க முடியும்.
- உடலை அசைவுக்கான பயிற்சியில் ஈடுப்படுத்தும் போது நடிகர் தாக்கமான பாத்திர அசைவுகளில் ஈடுபடமுடியும்.

(இது போன்று மூன்று விடயங்கள் எழுதியிருப்பின் அவதானித்துப் புள்ளி வழங்குக)

**குரற் பயிற்சி**
- நடிகர் சுவாசப் பயிற்சியில் ஈடுப்படும் போது அவரின் குரல்வளத்தை ஆற்றுகையில் வெளிப்படுத்த முடியும்.
- நடிகர் மனித உடலின் அடிவயிறு, நெஞ்சு, தொண்டை, உச்சந்தலை போன்ற இடங்களில் தசைநார்களை அழுத்துவதன் மூலம் பல்வேறு ஒலிகளைப் பிறப்பிக்க முடியும்.
- பல்வேறு ஒலிகளை வெளிப்படுத்தும் பயிற்சிகளினூடாகப் பாத்திரத்தின் பொருத்தமான உணர்வுகளை வெளிப்படுத்த முடியும்

(இது போன்று மூன்று விடயங்கள் எழுதியிருப்பின் அவதானித்துப் புள்ளி வழங்குக)

(09 புள்ளிகள்)

**(மொத்தம் 12 புள்ளிகள்)**


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

4. கூத்துக்கள் தமிழரின் மரபு வழியான நாடக வடிவங்கள் ஆகும்.

i. பின்வரும் கூத்துக்கள் பயிலப்படும் பிரதேசங்களைக் குறிப்பிடுக.

(அ) காமன் கூத்து - மலையகம்

(ஆ) காத்தவராயன் கூத்து - யாழ்ப்பாணம்

(இ) வசந்தன் கூத்து - மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் , முல்லைத்தீவு

(ஈ) தென்பாங்கு - மன்னார்.

(04 புள்ளிகள்)

ii. மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கூத்துக்களில் எவையேனும் இரண்டின் ஆற்றுகை மரபுகளை விளக்குக.

**காமன் கூத்து**

- கருவளச் சடங்காக அமைவது.
- சிவன், மன்மதனை அழித்த ஐதிகத்தைக் கதையாகக் கொண்டது.
- நோன்பிருந்து நிகழ்த்தப்படுவது.
- மாசி- பங்குனி மாதங்களில் நம்பிக்கை சார்ந்து நிகழ்த்தப்படுவது.
- தப்பு பிரதான வாத்தியமாக இடம்பெறுவது.
- காமன் பொட்டலில் நிகழ்த்தப்படும். வீடு வீடாக ஆடப்படுவதும் உண்டு.
- காமன் மாஸ்டர் காமன் கூத்தைப் பழக்குவார்.
- மன்மதன், ரதிக்குக் காப்பு கட்டுவதுடன் தொடங்கும்.
- விடிய விடிய ஆடப்படும்.

**காத்தவராயன் கூத்து**

- கருவளத்துடன் தொடர்புடையது.
- படச்சட்ட மேடையில் நிகழ்த்தப்படுவது.
- சிந்து நடையில் அமைந்தது.
- துள்ளு நடையில் நிகழ்த்துகை இடம்பெறுவது.
- காத்தவராயன், சின்னான், ஆரியப்பூமாலை, சிவன் , முத்துமாரி அம்மன் போன்றவை முக்கிய பாத்திரங்கள் இடம்பெறுவது.
- உடுக்கு பிரதான வாத்தியமாகும்.
- காத்தவராயன் ஆரியப்பூமாலையை மணம் புரிந்த கதை நிகழ்த்தப்படும்.

**வசந்தன் கூத்து**

- வட்டக்களரியில் நிகழ்த்தப்படுவது.
- 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களால் நிகழ்த்தப்படுவது.
- கோல்களைத் தட்டி ஆடப்படுவது.
- வேளாண்மையுடன் தொடர்புடைய விடயங்கள் நிகழ்த்தப்படுவது.
- முயிற்று வசந்தன், தொழில் வசந்தன், அம்மானை வசந்தன் ,வீரபத்திரர் வசந்தன் ,கண்ணகி வசந்தன் எனப் பலவகை உள்ளது.
- கதை தழுவி வராத கூத்து.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**தென்பாங்கு**

- மன்னாருக்குரிய தனித்துவமான கூத்து மரபு.
- நிறுதிட்டமான ஆடல் மரபுகளைக் கொண்டது.
- தெம்மாங்கு இசைமரபு.
- கிறிஸ்தவக் கதைகளுடன் நிகழ்த்தப்படுவது.
- காப்பு விருத்தத்துடன் தொடங்கப்படுவது.
- டொல்கி , மிருதங்கம், ஹார்மோனியம் அதிகம் பயன்படுத்தப்படுவது.

(இவற்றுள் யாதாயினும் இரண்டு கூத்துக்களின் ஆற்றுகை மரபு விளக்கப் பெற்றிருந்தால் அதற்கேற்றவாறு புள்ளிகள் வழங்கவும்)

2 X4 = 08புள்ளிகள்)

**மொத்தம் 12 புள்ளிகள்**

5. i. ஈழத் தமிழரிடையே காணப்படும் சடங்காட்டங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.

- சூரன் போர்
- பாண்டவர் வனவாசம்
- வேட்டைத் திருவிழா

(இவற்றை விட வேறு சடங்காட்டங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் பொருத்தமறிந்து புள்ளி வழங்குக.)

(03 புள்ளிகள்)

ii. மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு சடங்காட்டமும் நடத்தப்படும் பின்னணியை தருக.

**அ. சூரன் போர்**

முருக வழிப்பாட்டுடன் தொடர்புடையது. அதர்மம் அழியும் தர்மம் நிலைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் நிகழ்த்தப்படுவது.

**ஆ.பாண்டவர் வனவாசம்**

கிழக்கிலங்கையில், குறிப்பாக பாண்டிருப்பை அண்டிய கிராமங்களின் ஒற்றுமை, நம்பிக்கையினை வேண்டி நிகழ்த்தப்படுவது .

**இ. வேட்டைத் திருவிழா**

- இந்துமத சடங்காக அமையும்
- கடவுளர் வேட்டைக்குச் செல்வதை அடிப்படையாகக் கொண்டது.
- தீயதை அழித்தலை நோக்கமாகக் கொண்டது.
- கதவடித்து பாடுதல் பிரதான பண்பாகும்.

(இதுபோன்ற சடங்காட்ட நிகழ்த்துகையின் பின்னணிகளைக் குறிப்பிடுவதற்கு புள்ளி வழங்குக.)

(03 புள்ளிகள்)

iii. அச்சடங்காட்டங்கள் ஒவ்வொன்றினதும் முக்கிய பண்புகள் **இரண்டு** வீதம் சுருக்கமாக விளக்குக.

மேலே (i), (ii) இல் குறிப்பிடப்பட்ட சடங்காட்டங்கள் .

எப்போது, எங்கே, ஏன், எவ்வாறு நிகழ்த்தப்படுகின்றது என்பதனை உள்ளடக்கி,பண்புகளைக் குறிப்பிட்டு விளக்கி இருப்பின் புள்ளிகள் வழங்குக

3 x 2 = 06 புள்ளிகள்

**மொத்தம் 12 புள்ளிகள்**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

6. i. பின்வரும் அட்டவணையை உமது விடைத்தாளில் பிரதி செய்து, **ஆரொடு நோகேன்** நாடகம் தொடர்பாகக் கேட்கப்பட்டுள்ள விடயங்களைப் பூர்த்தி செய்க.

| | | |
|---|---|---|
| (அ) | நாடகாசிரியர் (எழுதியவர்) | - குழந்தை ம. சண்முகலிங்கம் |
| (ஆ) | எழுத்துரு வகை | - மோடிமை கலந்த யதார்த்தம் |
| (இ) | ஆற்றுகை நேரம் | - 45-60 நிமிடங்கள் |
| (ஈ) | பாத்திரங்களின் எண்ணிக்கை | - 11 |
| (உ) | நடிகர்களின் எண்ணிக்கை | - 11 ற்கு மேல் |
| (ஊ) | ஆற்றுகை வெளி | - படச்சட்ட அரங்கம் |
| (எ) | தேவையான மனிதவளம் | - 20-30 பேர் |
| (ஏ) | தேவையான நிதி வளம் | - 2000/= -10000 /= வரை |
| (ஐ) | இலக்குப் பார்ப்போர் | - பதின்மவயது /பாடசாலை மாணவர்கள் பெற்றோர் ,ஆசிரியர்கள் |
| (ஒ) | தேவையான இசைவாத்தியங்கள் | - கீபோட், தோல்வாத்தியம் |
| (ஓ) | தேவையான ஒத்திகைக்காலம் | - 01-03 மாதகாலம் (மணிக்கணக்கில் விடையளிப்பினும் புள்ளி வழங்கலாம்) |
| (ஔ) | நாடகத்தில் பயன்படும் ஒளிவகை | - பொட்டொளி, பரப்பொளி |

(06 புள்ளிகள்)

ii. ஆரொடு நோகேன் நாடகத்தில் வரும் பாத்திரங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவற்றில் ஏதேனும் **இரண்டு** பாத்திரங்கள் பற்றிச் சுருக்கமாக விபரிக்குக.

| | | |
|---|---|---|
| - ரஞ்சித்குமார் | ராஜ்குமார் | இராசதுரை |
| - சுபத்திரா | செல்வராணி | சரோஜினி |
| - சங்கரி | ரஜீவ் | ஆரணி |
| | ஷீலா | அம்பிகை |

மேற்குறிப்பிட்ட பாத்திரங்களுக்குள் ஏதாவது இரண்டு பாத்திரங்களின் பண்புகள் உடலியல், உளவியல் , சமூகவியல் நோக்கில் விவரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் .

( அனைத்துப் பாத்திரங்களும் குறிப்பிடப்பட்டிருப்பின் 02 புள்ளிகளும் இரண்டு பாத்திரங்கள் பற்றி விவரித்திருப்பின் 2X2 = 04 புள்ளிகளும் வழங்கப்படும்)

(06 புள்ளிகள்)

**மொத்தம் 12 புள்ளிகள்**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

7. i. நாடகத் தயாரிப்பு என்றால் என்ன?

நாடகத் தயாரிப்பு என்பது நாடகக் கலைப்படைப்பினை மேடையேற்றுவதற்கான அடிப்படைகளைத் தோற்றுவிப்பதுடன் கலைப் பெறுமானங்களுக்கான சூழல்களைத் திட்டமிடுவதுடன் கூடிய முகாமைத்துவச் செயற்பாடு ஆகும்.

(இது போன்ற பொருத்தமான விடை காணப்படின் அவதானித்துப் புள்ளி வழங்குக)

(02 புள்ளிகள்)

ii. நாடகத் தயாரிப்பாளரின் பணிகள் நான்கு தருக.

- நாடகத் தயாரிப்பைத் திட்டமிடல்
- நாடக எழுத்துருவைத் தெரிவு செய்தல்
- நெறியாளரைத் தெரிவு செய்தல்
- நடிகர்களை ஒழுங்குபடுத்திக் கொடுத்தல்.
- நிதியைக் கையளித்தல்
- விளம்பரப்படுத்தல்
- நுழைவுச் சீட்டுக்களை வழங்குதல்
- ஏனைய கலைஞர்களை வழங்குதல்.

(இவை போன்ற பொருத்தமான விடைகள் இருப்பின் அவதானித்துப் புள்ளிகள் வழங்குக)

(04 புள்ளிகள்)

iii. நாடகத் தயாரிப்பளர் தனது பணிகளைத் திறம்படச் செய்வதற்காக அவரிடம் காணப்பட வேண்டிய தகைமைகள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக.

- தலைமைத்துவம்
- ஆலோசனை கூறும் திறன்.
- வழிப்படுத்தும் ஆற்றல் .
- நிதி நிர்வாகத் திறன்.
- தொடர்பாடல் திறன்.

(இவை போன்ற பொருத்தமான விடைகள் மூன்றினை சுருக்கமாக விளக்கி இருப்பின் ஒவ்வொன்றிற்கும் 02 புள்ளிகள் வீதம் வழங்குக)

(06 புள்ளிகள்)

**மொத்தம் 12 புள்ளிகள்**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

Download all Past Papers>  https://bookbeekid.com/resource/past-papers/